பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
Registered as a Newspaper


# உதயன்

சுடர் : 39
கதிர் : 299

வெள்ளிக்கிழமை
20 செப்ரெம்பர் 2024

புரட்டாதி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"எலக்சன் சூடு
நெருங்க நெருங்க
துவக்குச் சூடுகளும்
அனல் பறக்குது
பாருங்கோ"



அதிர்கிறது தென்னிலங்கை

## 24 மணி நேரத்தில் 4 துப்பாக்கிச் சூடுகள்!

### நால்வர் பலி: இருவர் காயம்

கொழும்பு, செப்ரெம்பர் 20

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் கடந்த 24 மணிநேரத்தில் நடத்தப்பட்ட பல்வேறு துப்பாக்கிச் சூடுகளில் நால்வர் உயிரிழந்ததுடன் இருவர் காயமடைந்துள்ளனர். (11)

## ஜனாதிபதித் தேர்தல்: ஏற்பாடுகள் பூர்த்தி!

### ஜனநாயகக் கடமையை ஆற்றுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, செப். 20

நீதியாகவும், சுதந்திரமாகவும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிப்பதற்குரிய அத்தனை ஏற்பாடுகளும் தயார் என்றும் வாக்காளர்கள் அனைவரும் தமது (11)

## விபத்தில் இளைஞர் இறப்பு!

கிளிநொச்சி, செப். 20

கிளிநொச்சி - வட்டக்கச்சி வீதியில் பன்னங்கண்டி பாலத்துக்கு (11)

## தேர்தலின் பின் ஊரடங்கா? ஜனாதிபதியிடம் இறுதி முடிவு

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த நேர்ந்தால், ஜனாதிபதியின் ஆலோசனைக்கமையவே அதுதொடர்பில் நட (11)

## தீவகத்தின் வாக்குகள் ஹெலிகொப்டரில் வரும்

யாழ்ப்பாணம், செப். 20

ஜனாதிபதித் தேர்தலில், வாக்களிக்கும் பணிகள் நிறைவடைந்ததும் தீவகத்தின் வாக்குகள் ஹெலிகொப்டரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு (11)

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு, இன்று வெள்ளிக்கிழமை நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல்கள் ஆணைக் (11)

## சகோதரன் உயிரிழந்த கவலையில் சகோதரியும் உயிர்மாய்க்க முயற்சி

யாழ்ப்பாணம், செப். 20

சகோதரன் தவறான முடிவெடுத்து உயிரிழந்ததைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில், சகோதரியும் தவறான முடிவெடுத்து உயிர்மாய்க்க முயற்சித்துள்ளார். (11)

## சங்கிலி அறுப்பு: தம்பதியர் கைது

யாழ்ப்பாணம், செப். 20

சங்கானையில் சங்கிலி அறுப்பில் ஈடுபட்ட தம்பதியர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு (11)

## திலீபனின் நினைவுச்சதுக்கம் நல்லூரில் அங்குரார்ப்பணம்!

யாழ்ப்பாணம், செப். 20

தியாகதீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டுப் 'பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக' எனும் தொனிப் பொருளிலான ஆவணக் காட்சியகத்தைக் கொண்ட தியாகதீபம் திலீபன் நினைவுச் சதுக்கம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் நல்லூரில் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

மாவீரர்களின் பெற்றோர் மற்றும் (11)

## பால் புரைக்கேறி சிசு பலி

யாழ்ப்பாணம், செப். 20

பால் புரைக்கேறியதில் சிசுவொன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியைச் சேர்ந்த ராகுல் ரேணுகா என்ற பிறந்து 12 நாளான சிசுவே கடந்த 13 ஆம் திகதி உயிரிழந்துள்ளது. (11)

## தேர்தல் வன்முறைகள் யாழ்ப்பாணத்தில் இல்லை

### ஆனால் 43 சட்டமீறல்கள்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் நேற்று மாலை வரை தேர்தல் வன்முறைகள் எதுவும் நிகழவில்லை. ஆயினும் 43 தேர்தல் சட்டமீறல்கள் இடம்பெற்றுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலரும் பதில் (12)

கிளிநொச்சி மாவட்டத்தில்

## 108 வாக்குப்பெட்டிகள் இன்று விநியோகம்

கிளிநொச்சி, செப். 20

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான 108 வாக்குப்பெட்டிகள் பழைய மாவட்டச் செயலக வளாகத்திலிருந்து இன்று காலை 7 மணி முதல் வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாக (11)

முல்லைத்தீவு மாவட்டத்தில்

## வாக்கு எண்ணலில் 350 அலுவலர்கள்!

முல்லைத்தீவு, செப். 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் வாக்கு எண்ணும் பணியில் 350 அலுவலர்கள் கடமையில் ஈடுபடவுள்ளனரென முல்லைத்தீவு மாவட்டச் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (11)

## யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்: 593,187 பேர் வாக்களிக்கத் தகுதி

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 வாக்காளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 907 வாக்காளர்களுமாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 5 இலட்சத்து 93 ஆயிரத்து 187 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் (11)

## வாக்காளர்களுக்காக விசேட போக்குவரத்து

கொழும்பு, செப். 20

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய தேர்தல் கடமைகளுக்காக ஆயிரத்து 358 பேருந்துச் சேவைகள் இயக்கப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

மாவட்டத் தேர்தல் அலுவலகங்களின் (12)

மன்னார் மாவட்டத்தில்

## தேர்தலன்று 318 பேர் பாதுகாப்புக் கடமையில்

மன்னார், செப். 20


மன்னார் மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின்போது 271 பொலிஸாரும், 47 சிறப்பு அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடவுள்ளனரென மாவட்டச் செயலரும் தெரிவத்தாட்சி அலுவலருமான (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாவசிய நடமாட்டத்தை தேர்தலன்று தவிர்க்குக

## முப்படையினர் தயார் நிலை ஆணைக்குழு அறிவிப்பு



**கொழும்பு, செப்.20**
**வாக்களிப்பு தினத்தன்றும் வாக்களிப்பின் பின்னரும் வெளியில் நடமாடுவதை தவிர்க்குமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.**

வாக்களித்த பிறகு வீடுகளுக்குச் செல்லுங்கள். குழுக்களாக இணைந்து தேர்தல் விதி மீறல்களில் ஈடுபடவேண்டாம். அவ்வாறு ஈடுபட்டால் கைதுசெய்யப்படுவீர்கள். பாதுகாப்புப் பணிகளுக்கு தேவை ஏற்படின் முப்படையினரும் தயார் நிலையிலேயே உள்ளனர். குழுக்களாகக் கூடி பொது இடங்களில் திரைகளில் பெறுபேறுகளை பார்த்தல் தடை செய்யப்பட்டுள்ளது.
அவ்வாறு ஒன்றுகூடி தேர்தல் முடிவுகளை பார்வையிட்டு மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டால் அவர்களைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள்.
பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவார்கள், தேவையேற்படின் முப்படைகளும் களமிறங்கத் தயார் நிலையில் உள்ளது.
2ஆவது விருப்பு வாக்கை எண்ணவேண்டிவரின் இறுதி முடிவு அறிவிப்பு தாமதமாகலாம். எனவே, பொறுமை காக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.எல். ரத்நாயக்க கேட்டுக்கொண்டுள்ளார். (ச)

## தேர்தல் கடமையில் 63,000 பொலிஸார்

கொழும்பு, செப்.20
தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நாடு முழுவதிலும் 63,000க்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.
எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் நடந்தால் எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ச)

## சமூக ஊடகங்கள் தீவிர கண்காணிப்பு

கொழும்பு, செப்.20
சமூக ஊடகங்கள் தொடர்பில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார்.
தேர்தல் நாள்களிலும் தேர்தலுக்குப் பின்னரும் சமூக ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.
சமூக ஊடகங்கள் ஊடாக நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயற்பட்டால் அதற்குரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் .
குறிப்பாக கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு தனியான சேவையை ஆரம்பித்துள்ளது.
இந்த விடயம் தொடர்பில் சமூக ஊடகங்கள் ஊடாக எந்தவொரு தகவல் கிடைத்தாலும் அவதானம் செலுத்துமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவா பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

## வாக்களிப்பது எப்படி?



கொழும்பு, செப்.20
ஜனாதிபதித் தேர்தல் நாளை 21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அதற்கமைய ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் தமது வாக்கை எவ்வாறு சரியாக அளிக்க வேண்டும் என்பது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் சரியான முறையில் வாக்களிக்கும் முறைகள் பின்வருமாறு,
வாக்கினை '1' என்றும் விருப்பு வாக்குகளை '2' மற்றும் '3' என்றும் குறிக்கலாம்.
ஒரு வாக்கை மட்டும் அளிப்பதற்கு, '1' அல்லது 'X' எனக் குறிக்கலாம்.
எனினும், ஒரு வாக்கை அளிக்கும் போது '1' மற்றும் 'X' என்ற இரண்டையும் குறிக்க வேண்டாம்.
'X' அடையாளம் இட்ட பின்னர் வேறு எந்த எண்ணையும் பயன்படுத்த வேண்டாம்.
1 2 3 4 5 6 போன்ற பல இலக்கங்களையும் குறிக்க வேண்டாம்.
இந்த அனைத்து வாக்குகளும் நிராகரிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ச-44)

## வாக்காளர்களுக்கு விசேட வழிமுறை

கொழும்பு, செப்.20
ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்கள் தங்களது வாக்களிப்பு நிலையங்களை அணுகும் வகையில் இணையவழி முறையை தேர்தல் ஆணைக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது.
அதற்கமைவாக, வாக்களிப்பதற்கான அட்டைகளை 'Online Registration' என்ற இணைய வழி பதிவு மூலம் பார்வையிடமுடியும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
வாக்களிப்பதற்கான உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டையை இதுவரை பெறாத வாக்காளர்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்கலாம்.
மேலும் தபால் மூலம் வாக்காளர் அட்டைகளை இதுவரை பெறாத வாக்காளர்கள் சம்பந்தப்பட்ட தபால் நிலையங்களில் அவை தொடர்பான விவரங்களை கண்டறியுமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (ச)


## விசேட தேவையுடையோர் வாக்களிக்க விசேட வசதி!

கொழும்பு, செப்.20
ஜனாதிபதித் தேர்தலில் விசேட தேவையுடையவர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
கண்பார்வையற்ற வாக்காளர் ஒருவர் வாக்குச் சாவடிக்குச் செல்லும் போது அங்கு கடமையில் இருக்கும் சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தரின் உதவியுடன் இலகுவாக வாக்களிக்க, வாக்குச்சீட்டினை தொட்டுணரக்கூடிய வகையில் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.
இதேவேளை, தேர்தலன்று வாக்காளர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது சட்டவிரோதமானது. இயலாமையுடையவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாயின் அதற்கு தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் அனுமதி பெறவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)


## அமெ. பிரஜைகளுக்கு தகவல்கள் பரிமாற்றம்

கொழும்பு, செப். 20
தேர்தல் காலத்தில் இலங்கையிலுள்ள அமெரிக்கப் பிரஜைகளுக்கு நேரத்துக்கு நேரம் குறுந்தகவல்களையும், மின்னஞ்சல்களையும் அனுப்புவதற்கு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முடிவு செய்துள்ளது.
இதற்கென 'ஸ்மார்ட் ட்ரவலர்' என்ற திட்டத்தை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிமுகம் செய்துள்ளது. இந்தத் திட்டத்தில் தொடர்பு கொள்வதற்கு வசதியாக மின்னஞ்சல் முகவரி போன்றவற்றை பதிவு செய்யுமாறு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ச-22,6)

### உங்கள் வாக்குச்சீட்டை சரியாக அடையாளமிடுவது எப்படி?





நீங்கள் தெரிவு செய்யும் வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னத்துக்கு அருகிலுள்ள பெட்டியில் இலக்கம் 1 ஐ அடையாளமிடவும்




வாக்குச் செலுத்துபவர் தனது இரண்டாம் மூன்றாம் விருப்பத் தெரிவுகளை முறையே இலக்கம் 2 மற்றும் 3 இனால் அடையாளமிடலாம்.




ஒரு வாக்குச்சீட்டின் மூன்றாவது விருப்பத் தெரிவு அடையாளமிடாத போதிலும் இரு வேட்பாளர்களுக்கு சரியான முறையில் அடையாளமிடலாம்.




ஒரு வாக்கை மட்டும் அளிப்பதற்கு x என அடையாளமிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் கடமைபுரிவோர் ஒழுக்கத்தைப் பின்பற்றுங்கள்

## ஆணைக்குழு அறிவித்தல்!

**கொழும்பு, செப்.20**

**வாக்கெடுப்பு நிலையங்களுக்குள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்குள் தடை விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.**

அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படுவதாவது, வாக்கெடுப்பு நிலையங்களுக்குள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்குள் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துதல், நிழற்படம் எடுத்தல், காணொலி எடுத்தல், ஆயுதங்களை வைத்திருத்தல், புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல், போதைப்பொருள் பயன்படுத்துதல் மற்றும் மதுபானம் அல்லது போதைப்பொருள் பயன்படுத்தி வருகை தருதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது- என்றுள்ளது. (ச)

## தேர்தல் காலப்பகுதியில் மதுபானம் விற்கத் தடை!

தேர்தல் வார இறுதியில் மதுபானங்களை விற்பனை செய்வது கலால் திணைக்களத் தலைவரின் உத்தரவின் பேரில் தடைசெய்யப்பட்டுள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி சனி மற்றும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களில் நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. இதேவேளை, கலால் திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1913, கலால் கட்டளைச் சட்டத்தை மீறும் சந்தர்ப்பங்கள் தொடர்பில் பொதுமக்கள் முறைப்பாடுகள் மற்றும் தகவல்களுக்காக 24 மணிநேரமும் திறந்திருக்கும் என்றும் கலால் திணைக்களத்தின் பேச்சாளர் சன்ன வீரக்கொடி தெரிவித்தார். (ச)

## காலநிலை இடர் முன்னாயத்தம்

கொழும்பு, செப்.20

தேர்தலில் வாக்குப்பதிவு காலத்தின் போது எதிர்பாராத காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களை எதிர்கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறிப்பாக அனர்த்த நிலைமைகள் ஏற்படக்கூடும் என சந்தேகிக்கப்படும் மாவட்டங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, அனர்த்த இடையூறுகளை நிர்வகிப்பதற்கான விசேட கூட்டு வேலைத்திட்டமொன்றை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்த திட்டமி டப்பட் டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## வெடிபொருளுடன் நால்வர் கைது

கொழும்பு, செப்.20

வெடிபொருள்களுடன் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நாவுல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நாவுல பிபில பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் நேற்று இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இதன்போது, சந்தேகநபர்களிடம் 5 டெட்டனேட்டர்கள், 3 வோட்டர் ஜெல் குச்சிகள் மற்றும் வயர் ரோல் ஆகியவை கைப்பற்றப்பட்டன. நாவுல பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## ஜனாதிபதித் தேர்தல்: ம.உ. ஆணைக்குழு கவனம்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவும் கழுகுப்பார்வை செலுத்திவருகின்றது. அத்துடன், தேர்தல் தினத்தன்று வாக்காளர்களின் உரிமைகள் ஏதும் மீறப்படுகின்றதா என்பதை கண்காணிப்பதற்குரிய பொறிமுறையும் வகுக்கப்பட்டுள்ளது. மாவட்ட ரீதியாக இதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதேவேளை, தேர்தல் தினத்தன்று கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு கூடுதல் பணியாளர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தேசிய மட்டத்திலான தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் நடவடிக்கைகளை எடுத்துள்ளன. சர்வதேச கண்காணிப்பாளர்களும் களத்தில் உள்ளனர். அதேவேளை வாக்குரிமை மீறலை எதிர்கொண்டால் 0212222021, 0703654910 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்கலாம் எனற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார். (ஒ-44-26)

### வல்லிபுர ஆழ்வார் தீர்த்தக்கடலில்

## காணாமல் போனவரை தேடும் பணி தொடர்கிறது!

யாழ்ப்பாணம், செப். 20

துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திரத் தீர்த்தத்தில் கடலில் காணாமல் போனதாகக் கூறப்படும் இளைஞனைத் தேடும் முயற்சி தொடர்ந்தும் நடைபெற்று வரும் நிலையில் அவர் தொடர்பான தகவல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திரத் தீர்த்தம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் கடலில் நீராடிய அம்பனைச் சேர்ந்த கந்தசாமி விநோகரன் (வயது-54) என்ற குடும்பத் தலைவர் உயிரிழந்தார். அன்றைய தினம் தம்பு வீதி, நுணாவில் சாவகச்சேரியைச் சேர்ந்த தயாசீலன் வைஷ்ணவன் (வயது -28) என்பவர் தாயாருடன் ஆலயத்துக்கு வருகை தந்த நிலையில் தனது உடைமைகளை தாயாரிடம் ஒப்படைத்துவிட்டு கடலில் நீராடச் சென்ற நிலையில் அவர் திரும்பி வரவில்லை என அவரின் தாயாரால் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடற்படையினர் டோறா படகைப் பயன்படுத்தி தேடுதல் நடத்திவருகின்ற போதிலும் இதுவரை எவ்விதமான தகவலும் கிடைக்கப் பெறவில்லை. (ஒ-100)



## ப தினம் தெரியுமோ?

எங்கட ஆக்களிட்ட இப்ப பொன்னுக்கோ, பொருளுக்கோ, காசுக்கோ பெரிசாப் பஞ்சமில்லை. அப்ப என்னத்துக்குப் பஞ்சம்? நல்ல தலைவர்களுக்குத்தான் கடும் பஞ்சம். 2009 மட்டும் உலகத்திலேயே ஆருக்கும் கிடைக்காத ஒரு தலைவர் எங்களுக்கெண்டு இருந்தார். வீரத்துக்கோ, பாசத்துக்கோ, மதிநுட்பத்துக்கோ, நேர்மைக்கோ, துணிவுக்கோ , ஒழுக்கத்துக்கோ எந்தக் குறையும் வைக்காத ஒரு பரிபூரணமான தலைவரை நாங்கள் அடைஞ்சிருந்தம். மற்றநாடுகள், இனங்கள் எல்லாம் இப்பிடி ஒரு தலைவர் தமிழர்களுக்கு இருக்கிறதைப் பார்த்து பொறாமைப்பட்டும் இருக்கினம். ஆனால் முள்ளிவாய்க்கால் பிரளயத்துக்குப் பிறகு எல்லாமே தலைகீழா மாறிட்டுது. தேசியத்தலைவர் மாதிரி இருந்த இடத்தில ஒரு தேசிக்காயளவு தலைவர் கூட இல்லை. அங்கிடுதத்தியளும், சுயநலம் பிடிச்சதுகளும், அடுத்தவனைக் கவிட்டு விழுத்திறதுகளும், சுத்துமாத்துச் செய்யிறதுகளும்தான் இப்ப எங்களுக்கு தலைவர் எண்டு தங்களைத் தாங்களே சொல்லிக்கொள்ளுகினம்.

இப்பிடிப்பட்ட நிலைமையில, காத்தடிக்கிற போதே தூத்திக்கொண்டு தாங்களும் தமிழினத்துக்கு தலைவர்தான் எண்ட நினைப்பில சிலர் வேற ஆக்களை செட் பண்ணி, பில்டப் குடுக்க வெளிக்கிடுகினம். தலைமை தாங்கிறதெண்டது லேசுப்பட்ட விசயமில்லைத்தானே. அதுக்கெண்டு ஒரு தகுதி இருக்கெல்லோ. சிலர் வாய்வளம் நல்லா இருந்தா மட்டும் தலைவராகிடலாம் எண்டு நம்புகினம் போல. ஊர்க்காசை வாங்கி உலை வைச்சு, சாப்பாடு குடுக்கிறவையெல்லாம் வள்ளல் எண்டு சொல்லிக்கொள்ளுற காலத்தில, தங்கட வாயால எதையும் 'வளைச்சுப்போடுற' மாதிரி சனத்தையும் வளைச்சு தலைவராகி மேய்க்க வேணும் எண்ட ஆசை கனபேரிட்ட இருக்கு. அந்த ஆசையை தாங்கள் காட்டினால் சனம் ஏற்றுக்கொள்ளாது எண்டு தெரிஞ்சு தங்கட அடிப்பொடியளை வைச்சு 'தமிழினத் தலைவன், ஈழத்தமிழர்களின் தலைவன்' எண்டெல்லாம் பனர்களையும், கட்டவுட்டுகளையும் வைக்கத் தொடங்கிட்டினம்.

இப்பிடி பனர் , கட்டவுட் வைச்சு, தலைவராகிற போட்டியில சில கோயில்களின்ர தலைவர்மாரும் குதிச்சிருக்கிறதுதான் ஆகப்பெரிய பம்பல். கிட்டடியில ஒரு கோயில் திருவிழாவுக்குப் போனவை, மெயின் றோட்டில 'கட்டவுட்' ஒண்டைக் கட்டாயம் பார்த்திருப்பினம். கோயில் திருவிழா எண்டால் சாமிக்குத்தானே 'கட்டவுட்' வைக்கிறவை. ஆனால் இஞ்ச கோயில் தலைவருக்கு ஒரு கட்டவுட் வைச்சிருக்கினம். அதில 'ஈழத்திருநாட்டின் தலைமகன்' எண்டு அந்தக் கோயில் தலைவருக்கு ஐஸ் வைச்சிருந்திச்சினம். திருவிழா தொடங்கி முடியுமட்டும் அந்த கட்டவுட் அப்பிடியேதான் இருந்தது. அப்பிடியெண்டா அந்தக் கோயில் தலைவரும் இப்பிடியான விசயங்களை வரவேற்கிறார் எண்டுதானே அர்த்தம். 'அந்தக் கோயில் தலைவர்தான் இப்பிடி கட்டவுட் வைக்கவே சொன்னவர்' எண்டு அக்கம் பக்கச் சனங்களும் கதைக்கினம். எது உண்மையெண்டது அம்மாளாச்சிக்குத்தான் தெரியும்.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவர் உற்சவம்

யாழ்ப்பாணம், செப்.20

நீர்வேலி தெற்கு முருகையன் கோவிலின் வைரவர் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும்.

இதன்போது அபிஷேகம், விசேட பூஜைகள், பொங்கல் வழிபாடுகள் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25, 17)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்து விடுவீர்கள். உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்புண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** ஆதரவு உற்சாகம் தரும். திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். சுபச்செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பணியாளர்களால் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். காரியங்களில் வெற்றியும் உண்டாகும். முருகப்பெருமானை வழிபடுவது நலம் தரும். உணவு விடயத்தில் கவனம் தேவை. புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். மகாவிஷ்ணு வழிபாடு நலம் சேர்க்கும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். புதிய முயற்சியைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. உடல்நலனில் கவனம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். உறவினர்களால் சங்கடங்கள் உண்டாகும். பேசும்போது பொறுமை அவசியம்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும் உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும், ஆடை, ஆபரண சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ஆதாயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். செலவு செய்யவேண்டி வரும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். துணிச்சலாகச் செயல்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். ஆதாயம் உண்டாகும். சிலருக்கு சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.




# நெடுந்தாரகை சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 20

**சுமார் ஒரு வருடத்தின் பின்னர் நெடுந்தாரகை பயணிகள் படகு நேற்று தனது சேவையை ஆரம்பித்துள்ளது.**

படகில் மேற்கொள்ளப்பட்ட திருத்தப்பணிகளை தொடர்ந்து வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், வீதிஅபிவிருத்தி அதிகாரசபையிடம் நெடுந்தாரகை பயணிகள் படகை இன்று காலை உத்தியோக பூர்வமாக கையளித்தார். இதுவரை காலம் மாகாண சபையின் பொறுப்பில் காணப்பட்ட இந்தப் படகானது 52 மில்லியன் ரூபா செலவில் திருத்தப்பட்டு, வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது நெடுந்தாரகை படகு தினமும் நெடுந்தீவில் இருந்து ஒரு தடவை குறிகட்டுவான் இறங்குதுறைக்குப் பயணிக்க உள்ளது. நெடுந்தாரகை படகில் ஒரு தடவையில் 80 பேர் பயணிக்கமுடியும். தமது தீவில் நீண்டகாலமாகக் காணப்பட்ட போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுத்தமை தொடர்பில், ஆளுநருக்கு நெடுந்தீவு மக்கள் நன்றியைத் தெரிவித்தனர். (ச-27,26,66,20)

## யாழ் . வணிகர் கழக நிர்வாகசபைத் தெரிவு

யாழ்ப்பாணம், செப்.20

யாழ். வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் யாழ். வணிகர் கழகப்பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கூட்டத்தில் யாழ். வணிகர் கழகத்தில் இ.ஜெயசேகரன் தலைவராகவும், இ.ஜெயராசா உபதலைவராகவும், ச.சிவலோகேசன் செயலாளராகவும், ந.ஜெகமோகன் உபசெயலாளராகவும், ச.சிவகுமரன் பொருளாளராகவும் மற்றும் 16 நிர்வாகசபை உறுப்பினர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ரி)

## தேர்தலை முன்னிட்டு எரிபொருள் தாராளம்

கொழும்பு, செப்.20

ஜனாதிபதித்தேர்லை முன்னிட்டு நாட்டிலுள்ள சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் போதியளவு பெற்றோல், டீசலை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விநியோகித்து வருகிறது.

கடன் மற்றும் காசோலை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றன. தேர்தல் பணிக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு டீசல் வழங்குவதற்கென மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்களினால் எரிபொருள் விற்பனை நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (ச-25, 17)

## குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.20

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை

நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் சுவாமிகளின் நினைவாலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் கந்தபுராணம் பற்றி சொல்வேந்தன் செ.சிறி ஆதவன் சொற்பொழிவாற்றுவார். (ரி)

## தேர்தலையொட்டி விடுமுறை

சாவகச்சேரி செப். 20

தென்மராட்சிப் பிரதேசமோட்டார் அபிவிருத்தி அலகு இன்று இயங்காது என்று பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் பிரதேச செயலக அலுவலர்கள் பங்குபற்றவுள்ளதால் இன்று அலகு இயங்காது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## அத்தியாவசிய பொருள்கள் விலையுயர்வு



யாழ்ப்பாணம். செப்.20

பெரிய வெங்காயம், பழப்புளி போன்றவற்றின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன. கிலோ 200 ரூபாவாக விற்கப்பட்ட பெரிய வெங்காயம் 300 ரூபாவாகவும், கிலோ 400 ரூபாவாக விற்கப்பட்ட பழப்புளி 800 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை தேங்காய் ஒன்றின் விலை 140 ரூபா வரையில் உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-25, 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சிந்தனை மாற்றம் அவசியம்

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு நீதிமன்றில் தடைகோரிய பொலிஸாரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. கடந்த காலங்களிலும் பொலிஸார் இவ்வாறான தடை கோரல்களை முன்வைக்கின்றபோது நீதிமன்றங்கள் அவற்றை நிராகரித்திருக்கின்றன. ஆனாலும் பொலிஸாரும், சற்றும் மனம்தளராத விக்கிரமாதித்தன் போல மீண்டும் மீண்டும் தடை கோரி நீதிமன்றங்களை நாடுகின்றார்கள். இதுதான் இந்த நாட்டின் சாபக்கேடு.

சட்டத்தின் ஆட்சியை நிலை நாட்ட வேண்டிய பொலிஸார், சிங்கள - பௌத்த கொள்கையின்பால் ஆட்சியாளர்களின் எண்ணத்தை நிலைநாட்ட முற்படுவதாலேயே இப்படி நடந்து கொள்கின்றார்கள். இந்த நாட்டில் குருதிச் சகதிக்கு வித்திட்ட போருக்கு மூலகாரணமாக அமைந்ததும் அதுதான்.

எண்ணிக்கையில் இலங்கையில் இரண்டாவதாக உள்ள தமிழ் இனத்தவர்கள் மீது, இலங்கையின் ஆட்சியாளர்களும், அதனை முன்கொண்டு செல்பவர்களும் பாரபட்சத்துடன் அணுகியமையின் விளைவாக உருவான பேரழிவு இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இனப்பிரச்சினையின் விளைவாக உருவானது போர். போரினது விளைவுகளில் ஒன்றாக உருவாகியதுதான் பொருளாதாரப் பிரச்சினை. நாட்டை இன்று உலுப்பிக் கொண்டிருக்கும் இவற்றுக்கு தீர்வு தேட வேண்டிய நிலையில் இன்னமும் பழைய சித்தாந்தங்களின்படி செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற ஆட்சியாளர்களாலும், அரச கட்டமைப்புகளாலும் விடிவோ மாற்றமோ கிடைக்கப்போவதில்லை. தனியே தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு மாத்திரமல்லாது, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் நாள் நினைவேந்தல் என தமிழர்கள் தங்கள் உடன்பிறந்த உறவுகளை தங்களுக்காக உயிர் நீத்த உறவுகளை நினைவுகூர்தல் போன்றவற்றையும் தடை செய்வதிலேயே ஆட்சியாளர்களும் -அதன் அரச கட்டமைப்புகளும் முனைப்பாக இருந்து வந்திருக்கின்றன. பல்வேறு தடைகளைத் தாண்டித்தான் தமிழர்கள் இந்த நினைவுகூரல்களை முன்னெடுக்க வேண்டியவர்களாக இருந்திருக்கின்றார்கள்.

போரின் பின்னரான 15 ஆண்டுகளில் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட உச்சமான உளவியல் போராக இந்த நினைவேந்தல் மீதான தடைகளை அல்லது தடைகளை ஏற்படுத்தும் முயற்சிகளைக் குறிப்பிடமுடியும். அதிலிருந்து பெரும் போராட்டங்களுக்கு மத்தியிலேயே மீண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான நினைவேந்தல்கள், தடைகளுக்கு மத்தியிலும் கடந்த காலங்களில் தமிழர் பகுதிகளில் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றன. நினைவேந்தல்களை தமிழர்கள் கடைப்பிடித்தமையூடாக இந்த நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு குந்தகமோ அல்லது ஏனைய இனங்கள், மதங்களுடன் குரோதங்களோ எவையும் ஏற்படவில்லை. தமிழர்கள் நினைவேந் தல்களை கடைப்பிடிக்கக் கூடாது என்பதற்காக பொலிஸார் நீதிமன்றங்களில் முன்வைக்கும் காரணங்கள் எவையும், கடந்தகால நினைவேந்தல்கள் கடைப்பிடிக்கப்பட்டபோது இடம்பெறவில்லை. ஆனாலும், பொலிஸார் அதே காரணங்களை திரும்பத் திரும்ப நீதிமன்றங்களில் முன்வைப்பதன் பின்னால் உண்மையில் இருப்பது சிங்கள –பௌத்த மேலாதிக்க மனநிலை என்பது மட்டுமே தெளிவாகின்றது.

இந்த எண்ணத்தில்-சிந்தனையில்-மாற்றம் ஏற்படாத வரையில் இலங்கையின் பிரச்சினை என்றுமே தீரப்போவதில்லை.




# விருப்புவாக்கு செயன்முறை மக்களுக்கு விளக்கமில்லை!

*சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் கரிசனை*

**கொழும்பு, செப்.20**

**விருப்புவாக்கு அளிக்கும் செயன்முறை தொடர்பில் மக்கள் மத்தியில் பல்வேறு குழப்பங்கள் நிலவுகின்றன, பெரும்பாலான வேட்பாளர்கள் தமது சின்னத்துக்குப் புள்ளடி இடுமாறே பிரசாரம் செய்திருந்தநிலையில், இது விருப்பு வாக்களிப்பு செயன்முறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் நாளை நடைபெறவுள்ளது.

வேட்பாளர்கள் சகலரும் பெரும்பாலும் தமக்குப் புள்ளடி இடுமாறு விளம்பரப்படுத்தினரே தவிர, விருப்பு வாக்கு அளித்தல் தொடர்பில் விளம்பரப்படுத்தவில்லை. இது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தாதா? என்றும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தேர்தல் ஆணைக்குழுவினரிடம் கேட்டறிந்து கொண்டனர். (ச)

## புதிய தவணைக்கு முன் சீருடைகள் கையளிப்பு

கொழும்பு, செப்.20

2025 ஆம் ஆண்டு புதிய பாடசாலை தவணை ஆரம்பிக்கும் ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் சீருடைகள் விநியோகிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சீன அரசாங்கத்தால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட பாடசாலைச் சீருடைகளின் முதலாவது தொகுதியை எதிர்வரும் நவம்பர் மாதம் 13ஆம் திகதி இலங்கை பெற்றுக்கொள்ளவுள்ளது. அதன்படி 3 கட்டங்களின் கீழ் பெறப்பட்ட பாடசாலைச் சீருடைகளின் கடைசி கையிருப்பு டிசெம்பர் 20 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நாளை வரையில் அமைதிக்காலம்



கொழும்பு, செப்.20

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ள நிலையில் நாளை 21ஆம் திகதிவரை அமைதியான காலப்பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இக்காலப்பகுதியில் ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் முன்னெடுக்கப்படும் அவசியமற்ற பிரசாரங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

*புலமைப்பரிசில்*

## வினாக்கள் நீக்கம் தீர்மானம் இல்லை

கொழும்பு, செப்.20

இந்த ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாள் இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பில் இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அந்த விவகாரம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் தாளில் இருந்து 03 வினாக்களை நீக்குவதற்கு பரீட்சைத் திணைக்களம் எடுத்த தீர்மானத்தால் தமது பிள்ளைகளுக்கு அநீதி இழைக்கப்படுவதாக தெரிவித்து பெற்றோர் குழுவொன்று நேற்று முன்தினம் பரீட்சைத் திணைக்களத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ச-6)

**நாளை**

**21.09.2024**

சனிக்கிழமை - புரட்டாதி - 05

சுபநேரம் : 03.02 - 04.32

ராகுகாலம் : 09.02 - 10.32

**நாளொரு நல்வார்த்தை**

**மடையர்களுடைய அகராதியில் தான் இயலாது என்ற சொல்லைக் காண முடியும்.**

- நெப்போலியன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பரிசளிப்பு நிகழ்வு

மன்னார், செப்.20

மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட மணி மாஸ்டர் விருதுக்கான திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு வி.எம்.சி.ரி. நிறுவனத்தின் இயக்குநர் பொறியியலாளர் .ஆ.விமலேஸ்வரன் தலைமையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினராக மன்னார் உதவிக் கல்விப் பணிப்பாளர் பா.ஞானராஜ் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (ச-25,56)

# தேர்தல் அலுவலகங்களின் செயற்பாடுகள் வரையறை

கொழும்பு, செப்.20

**ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களின் செயற்பாட்டு நேர வரம்புகள் குறித்து தேர்தல் ஆணைக் குழு அறிவித்துள்ளது.**

அந்த அறிவிப்பின்படி, தொகுதி அளவில் அறிவிக்கப்பட்ட கிளை தேர்தல் அலுவலகங்களின் செயற்பாடு நேற்று நள்ளிரவுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாக்குச் சாவடியின் மட்டத்திலும் நிறுவப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் இன்றுமுதல் செயற்படத் தொடங்குவதுடன் செப்ரெம்பர் 22 ஆம் திகதி வரை பராமரிக்கப்படும்.

அதேபோல், தொகுதி அளவிலான தேர்தல் அலுவலகங்கள் செயற்படுவதற்கான கால அவகாசமும் செப்ரெம்பர் 22ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைகிறது.

மேலும், செப்ரெம்பர் 22ஆம் திகதி நள்ளிரவில் இருந்து, ஜனாதிபதி வேட்பாளர்களோ அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளோ தங்கள் வீடுகளைத் தேர்தல் அலுவலகங்களாகப் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இந்தக் காலக்கெடுவுக்கு அப்பால் செயற்படும் தேர்தல் அலுவலகங்கள் தேர்தல் சட்டத்தின்படி உடனடியாக அகற்றப்படும் என தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச)

## 2.6 மில்லியன் தொன் சிறுபோக நெல் அறுவடை

கொழும்பு, செப்.20

2024ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெல் அறுவடையில் எதிர்பார்த்த இலக்கை எட்டியுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு சிறுபோக நெல் அறுவடை 2.6 மில்லியன் மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது. கடந்த சிறுபோகத்தின் போது 2 மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறுவடை பதிவு செய்யப்பட்டிருந்ததாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## ரமிக் ரம்புக்வெலவின் சொகுசு வீடுகள் முடக்கம்



கொழும்பு, செப்.20

இரு மாதங்களுக்கு மேலாக சிறை வாசம் செய்து கடந்த வாரம் பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகனான ரமிக் ரம்புக்வெலவுக்கு சொந்தமான சுகபோக வீடுகள் இரண்டின் பாவனைக்கு, டிசெம்பர் 19 ஆம் திகதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி மஞ்சுல திலகரத்னவால் நேற்று வியாழக்கிழமை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இலஞ்ச ஊழல் ஆணையகத்தால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம், கொள்ளுப்பிட்டியவிலுள்ள ரமிக்கின் தொடர் மாடி சொகுசு வீடுகளில் ஒன்று 80 மில்லியன் ரூபாவுக்கும் மற்றையது 65 மில்லியன் ரூபாவுக்கும் வேண்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு வீடுகளினதும் பெறுமதி தொடர்பில் வழக்கு விசாரணை நடைபெற்று வருவதால் அவற்றுக்குத் தடை விதிக்குமாறு இலஞ்ச ஊழல் ஆணையகத்தால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-25, சி)

## வினாத்தாள் கசிவு மூவர் பணிநீக்கம்

கொழும்பு, செப்.20

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிந்த விவகாரத்துடன் தொடர்புடைய மூவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் இரத்மலை திஸ்ஸ கல்லூரியின் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நிலையத்தில் பணிபுரிந்த மண்டபத் தலைவர் உட்பட மூவரின் சேவையை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.டபிள்யூ. சமரக்கோன் தெரிவித்துள்ளார். பரீட்சை நிலையத்தில் இருந்த உதவி அதிபர் ஒருவராலேயே ஆசிரியர் குழுவுக்கு வினாத்தாள் பகிரப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பரீட்சைத் திணைக்களம் என்பன இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-சி 25)

## அதிகளவு சுவரொட்டி வவுனியாவில் பதிவு

கொழும்பு, செப்.20

தேர்தல் வரலாற்றில் வவுனியா பிரதேசத்தில் அதிகளவான சுவரொட்டிகள் அகற்றப்பட்டமை இதுவே முதல் தடவை என வவுனியா பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நாளிலிருந்து வவுனியா பிரதேசத்தில் ஒட்டப்பட்டிருந்த 25,000க்கும் மேற்பட்ட சுவரொட்டிகள் பொலிஸாரின் தலையீட்டினால் அகற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## பயிற்சிநெறி

கிளிநொச்சி, செப்.20

பச்சிலைப்பள்ளி மகளிர் அமைப்பின் ஒழுங்குபடுத்தலில் ஆரி வேர்க் தொடர்பான பயிற்சி நெறி உதவிப்பிரதேச செயலாளர் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. (கி-9)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான இலக்கிய விழிப்புணர்வு நிகழ்வு 'இலக்கியத்தை நேசிக்கும் சமுதாயத்தை முன்னிலைப்படுத்துவோம்' எனும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-66)



## யாழ். மத்திய கல்லூரியில் நுளம்புக் கட்டுப்பாட்டுப் பணி

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வளாகத்தைச் சுற்றி நுளம்பு பெருகுவதைக் கட்டுப்படுத்துவதற்கான புகை அடிக்கும் பணியை சுகாதாரப் பிரிவினர் நேற்று முன்னெடுத்தனர். அத்துடன் கல்லூரியை அண்டிய பகுதிகளில் காணப்படும் வடிகால்களுக்கு மருந்து விசிறப்பட்டு துப்புரவு செய்யப்பட்டன. ஜனாதிபதித் தேர்தல்களுக்கான வாக்குகள் எண்ணும் நிலையமாக மத்திய கல்லூரி இயங்கவுள்ளதால் இங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
08 . 05 . 1950

மறைவு
18 . 09 . 2024

## சரவணமுத்து சந்திரநாயகம்

ஏழாலை தெற்கு மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும், சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சந்திரநாயகம் அவர்கள் நேற்று முன்தினம் (18.09.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நிரோஷன் மற்றும் கிஷாந்தன் (Driver, Super Shoes disributors), நிஷாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் பூநகரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாயுச்சியன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர் - சித்த மருத்துவ பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மாமனாரும், பிரித்திகா, தஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னேஸ்வரி, குமாரசாமி, அருமைநாயகம் மற்றும் தங்கரத்தினம், பரமேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற பாலசிங்கம், செல்வராசா மகேஸ்வரி மற்றும் சண்முகநாதன், திலகவதி, காலஞ்சென்ற சிவசத்தியபாலன், சத்தியபாமா மற்றும் பத்மினிதேவி, றஞ்சினிதேவி, பாமினிதேவி, முருகானந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
மகன் - கிஷாந்தன் - 076 894 6570

(CS/56261) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
15 . 02 . 1963

மறைவு
18 . 09 . 2024

## செம்மனச்செல்வி தேசிகன்

பிராம்பற்றை, கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட செம்மனச்செல்வி தேசிகன் (ஓய்வுபெற்ற ஆசிரியை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) அவர்கள் நேற்று முன்தினம் (18.09.2024) புதன்கிழமை இறைபதம் எய்தினார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான E.S தியாகராஜ (கோப்பாய் வடக்கைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தபால் அதிபர்) - ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி இராஜகோபால் - லட்சுமி (தமிழ்நாடு கும்பகோணம்) தம்பதியரின் பிரிய மருமகளும், இராஜகோபால் தேசிகனின் அன்பு மனைவியும், கேசவனின் (வவுனியா தமிழ் மத்தியமகாவித்தியாலய மாணவன்) அருமைத்தாயாரும், வடகோவை வரதராஜன், யோகாவளவன் (கனடா) ,சிவசக்தி ஜெயராஜ் (ஆசிரியை), காலம்சென்றவர்களான வாசுகி நவரத்தினம், இராஜராஜன் (கோமகன் ) ஆகியோரின் உடன்பிறந்த சகோதரியும் . கௌசல்யா ரங்கநாதன் ,மைதிலி ஷேசாஸ்திரி . செண்பகலட்சுமி மகாலிங்கம் (தமிழ்நாடு கும்பகோணம்) இராஜாம்பிகை வரதராஜன் . யோகாவளவன் மாலதி . ஜெயராஜா . சுசிலா இராஜராஜன் . மற்றும் காலம்சென்ற சண்முகம் நவரத்தினம் ஆகியோரின் பிரிய மைத்துனியும் ஆவார் .

அவரின் ஈமக்கிரிகைகள் (20.09.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணிக்கு ஓமந்தை பொலிஸ் நிலையம் அருகாமையில் உள்ள அரச உத்தியோகத்தர் குடியிருப்பு திட்ட 08 ம் ஒழுங்கையில் அமைந்த அவரது இல்லமான பண்பகத்தில் (இலக்கம் UY) நடைபெற்று பூதவுடல் ஓமந்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தேசிகன், கேசவன், சிவசக்தி (ரோஸி)
வடகோவை வரதராஜன், யோகாவளவன்.

ஓமந்தை,
வவுனியா.

(CS/56260) J-1

## நிலநடுக்கம்

பப்புவா நியூகினியா தீவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவுகோலில் 6 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

## விரிசல்

தெற்கு சீனாவில் 10 வயது ஜப்பானிய மாணவர் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ள நிலையில், இதற்கு தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை ஜப்பான் ஆதரித்துள்ளது. (ம)

# ஓராண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு
15 . 02 . 1940

இறப்பு
02 . 10 . 2023

## அமரர் கிருஷ்ணன் அன்னலட்சுமி

ஓராண்டு ஓடி மறைந்ததுவோ - அம்மா
அன்பு வதனமும் அரவணைக்கும் கைகளும்
பசி என்று வந்தோர்க்கு அமுதளிக்கும்
கருணை குணம் கொண்ட தாயாரே
வாழ் நாள் போதுமென்று வானுறைந்த தெய்வமே
குல தெய்வம் நீயம்மா - உன்
குலம் காத்து வழிநடத்தம்மா
காலமெல்லாம் உமை நாம் மறவோம் அம்மா
என்றும் உங்கள் நினைவுகளுடன்

குடும்பத்தினர்
கி.அசோக்
077 711 0338

45, சிவன் புதுவீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

(CS/56256) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
11 . 12 . 1953

மறைவு
19 . 09 . 2024

## பாலகிருஷ்ணன் ஜெயசோதி

சாவகச்சேரி கோயில் குடியிருப்பை பிறப்பிடமாகவும் புதிய செங்குந்தா வீதி கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் ஜெயசோதி நேற்று (19.09.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-நாகரத்தினம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற தம்பித்துரை பாலகிருஷ்ணன் அவர்களின் அன்பு மனைவியும் துசாந்தனின் (நூலக உதவியாளர் யாழ் பொது நூலகம்) அன்புத் தாயும் காலஞ்சென்ற ஜெயசந்திரா, ஜெயமணி, கதிர்காமநாதன் (கனடா), மகேந்திரன், ஜெயரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஞானவல்லி மற்றும் றதீந்திரன் பத்மாசனி காலஞ்சென்ற பேரின்பமணி மற்றும் பத்மநாதன் (கனடா), பாலச்சந்திரன் (அமெரிக்கா), ராதா, ஜெகநாதன், ரூபா (ஜெர்மன்), சாந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2024) வெள்ளிக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் இல 51 புதிய செங்குந்தா வீதி கல்வியங்காடு எனும் முகவரியில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
B.துசாந்தன் (மகன்)

(CS 56263) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்க நாடுகளை ஆட்டிப்படைக்கும் தொற்று



ஜொகன்னர்ஸ்பேர்க், செப்.20 ஆபிரிக்க நாடுகளில் குரங்கம்மை நோய் வேகமாகப் பரவி வருகின்றது. இதுவரை 700க்கும் மேற்பட்டோர் குரங்கம்மைத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். கடந்த வாரத்தில் மாத்திரம் 107 மரணங்கள் பதிவாகியிருந்தன. இந்தத் தொற்றுக்கான தடுப்பூசியை, டென்மார்க்கைச் சேர்ந்த, 'பவாரியன் நார்டிக்' எனும் உயிரி தொழில்நுட்ப நிறுவனம் தயாரித்துள்ளது. பல்வேறு கட்டப் பரிசோதனைகளுக்குப் பின் உலக சுகாதார ஸ்தாபனம் குறித்த தடுப்பூசிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

(எ-இ)


## விதை நெல் விற்பனைக்கு

இயந்திரத்தினால் சுத்திகரிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைத் தரக்கூடிய மூன்றரை மாத B.G.312, மூன்று அரை மாத B.G 34.6, நான்கு மாத B.G.406 இன விதை நெல் விற்பனைக்கு உண்டு.

**077 659 2044**


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலைப்பீடம்
## பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் (டிப்ளோமா)
## பகுதிநேர ஈராண்டுக் கற்கைநெறி - (2024-2026)
## புதிய அனுமதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும் கல்வி நிர்வாகிகளிடமிருந்தும் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 18.10.2024 அன்று 50 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்தோ (www.jfn.ac.lk) அல்லது கலைப்பீட இணையத்தளத்திலிருந்தோ (www.arts.jfn.ac.lk) தரவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் யாவும் தத்தம் திணைக்கள தலைவர் ஊடாகவோ அல்லது பாடசாலை அதிபர் ஊடாகவோ அனுப்பப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் மக்கள் வங்கிக் கிளையில் கணக்கிலக்கம் 040022240000980 க்கு ரூ.1,500/- செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்து பிரதிப் பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 18.10.2024 திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

இக்கற்கைநெறிக்கான கட்டணம் ரூ. 85,000/-.

எழுத்துத் தேர்வு (பொதுவிவேகம் மற்றும் கல்வியியல் பொதுத்தகைமை ஆகிய பாடங்கள்) மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து 25 மைல் சுற்றாடலுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கைநெறிக்குப் பதிவுசெய்யும்போது மேற்குறிப்பிட்ட இடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், பல்கலைக்கழகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்து அனுப்பப்பெறாத விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**பதிவாளர்**
**19.09.2024**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு : 05.01.1952 உதிர்வு : 12.10.2022

### அமரர் சரோஜினிதேவி நாகேந்திரன்

(ஓய்வு பெற்ற பிரதி முகாமையாளர் மக்கள் வங்கி)

உரித்துடைய உயர்தலைவி எங்கே போனீர்
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டீரோ
பொன்னான புன்சிரிப்பு எங்கே
அழகான தங்கமுகம் எங்கே
வாயினிக்க கூப்பிட்ட
மனமினிக்க வைத்த
காந்தக்குரல் ஓய்ந்தே போச்சா
காக்க வைத்து மனம் கனக்கவைத்து
கனதூரம் சென்றுவிட்டீர்கள்
அம்மாவின் ஆத்மா இறைபதம் சரணடைய பிரார்த்திப்போம்

நேசவாசர்
மீசாலை வடக்கு
கொடிகாமம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தாய்மடி 15 . 10 . 1924



இறைமடி 14 . 09 . 2024

### திருமதி செல்வமலர் சிவஞானசுந்தரம்

யாழ் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto தனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வமலர் சிவஞானசுந்தரம் அவர்கள் கடந்த (14.09.2024) சனிக்கிழமை அன்று இறைவனின் திருவடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற விதானை பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம், சிவக்கொழுந்து பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம் தம்பதியரின் அன்பு நிறை இளைய மகளும், காலஞ்சென்றவர்களான சண்டிலிப்பாயைச் சேர்ந்த கதிரவேலு முத்துக்குமாரு-முத்துக்குமாரு இராசம்மா (சண்டிலிப்பாய் கல்வளைப்பிள்ளையார் கோவிலின் முன்னாள் அறங்காவலர்), தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் முத்துக்குமாரு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினமலர் தாமஸ் போயேஜ் ஹன்ட், இராஜகுலசிங்கம் பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம், அரசகுலசிங்கம் பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம், விஜயகுலசிங்கம் பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம், புஷ்பமலர் நாகரத்தினம், சுகிர்தமலர் கனகசபாபதி, யோகமலர் இராஜவல்லவன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், முத்துக்குமாரு ஆறுமுகதாஸ், முத்துக்குமாரு முத்துக்குமாரசூரியர் (பரமானந்தம்) ஞானரஞ்சிதமலர் முத்துக்குமாரசூரியர், மற்றும் காலஞ்சென்றவர்களான இராஜலக்ஷ்மி ஆறுமுகதாஸ், விஜயலக்ஷ்மி தியாகராஜா, எலிசா பேட்டஸ் ஹன்ட், தோமஸ் போயேஜ் ஹன்ட், அமுதவல்லி இராஜகுலசிங்கம், தனலக்ஷ்மி அரசகுலசிங்கம், மார்கிரேட் விஜயகுலசிங்கம், கந்தையா நாகரத்தினம், சுப்பிரமணியம் கனகசபாபதி, பரராஜசிங்கம் இராஜவல்லவன், ஆகியோரின் அன்பு மைத்துனியும், விஜயலக்ஷ்மி சுப்பிரமணியம் (விஜி), சிவகுமார், விஜயகுமார், ஜெயகுமார், காலம்சென்ற இராஜகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுப்பிரமணியம் இரத்தினசிங்கம், கௌரிதேவி விஜயகுமார், ஜெகதீஷ்வரி ஜெயகுமார், வசந்தாதேவி இராஜகுமார், காலம்சென்றவர்களான சாந்தினி சிவகுமார், பிரேமரஞ்சினி விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரசன்னா, சுகன்யா, குபேரன், அபினி, ஆசினி, இரஜீவ்குமார் (பிரேமன்), விமோஷனா, சஞ்சீவ்குமார், உறொஷாந்தகுமார், சாங்கீதா, சகானா, ஆரூரன், ஆர்த்திகன், மற்றும் சுரேஷ், விக்டோரியா, தயானா, ஆரன்யா, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், ஆகாஷ், அஞ்சலி, சச்சின், அர்ஜுன், பிரியன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக நாளை (21.09.2024) சனிக்கிழமை 5:00 PM – 9:00 PM மற்றும் ஞாயிறு 22 Sep 2024 8:00 AM – 9:30 AM வரை Ajax Crematorium (384 Finley Avenue Ajax ON L1S 2E3) இல் வைக்கப்பட்டு, அதன் பின்னர் அதே இடத்தில் கிரிகைகளுடன் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலதிக தொடர்புகளுக்கு: தகவல் : குடும்பத்தினர்
விஜயலக்ஷ்மி சுப்பிரமணியம் : (416)-805-1592, விஜயகுமார் சிவஞானம் : (647) – 293 - 9924
ஜெயகுமார் சிவஞானம் : (647)-829-9411 , வசந்தாதேவி இராஜகுமார் : +49 15566 176806

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையை ஆரம்பிக்க இந்திய நிறுவனம் முதலீடு

## வடக்கு ஆளுநருடன் ஆராய்வு



**யாழ்ப்பாணம், செப். 20**

**இந்திய நிறுவனத்தின் முதலீட்டில் அதிநவீன இயந்திரங்களின் பயன்பாட்டில் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் தலைமையில் ஆய்வு நிறுவனப் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.**

கலந்துரையாடலில், முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் யாழ். பிராந்திய சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் எ.ஆர். ஜெயமனோன், ஆய்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது உள்ளூர் மூலப்பொருள்களைப் பயன்படுத்தாது, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருள்களைக் கொண்டு சிமெந்து தயாரித்து பொதி செய்து உள்நாட்டுத் தேவைக்காக விற்பனை செய்யும் நோக்குடன் இந்தச் செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று தொழிற்சாலைக்கான முதலீட்டை மேற்கொள்ளவுள்ள ஆய்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அத்துடன் அதிநவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் எனவும், இதனூடாக உள்ளூர் மக்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்கப்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

நிதி மூலம், தொழிற்சாலையை நிறுவுவதற்கான காணி கோரிக்கை, மூலப்பொருள்களின் இறக்குமதி, விற்பனைச் செயற்பாடுகள், செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கான கால எல்லை, சுற்றாடல் அறிக்கை உள்ளிட்ட அனைத்து விடயங்களும் அடங்கிய முழுமையான முன்மொழிவுத் திட்டத்தை விரைவாக சமர்ப்பிக்குமாறு தெரிவித்த ஆளுநர், உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அதனை சாதகமான முறையில் பரிசீலிக்க தயாராகத் உள்ளதாகவும் கூறினார். (ச-20,27)



# தண்ணீர்ப் பிரச்சினைக்கு வடக்கு ஆளுநரால் தீர்வு

யாழ்ப்பாணம், செப். 20

மணலாறு எதா வெட்டுனு வெவ வித்தி யாலயத்தில் ஆசிரியர்களுக்கான விடுதியில் நீர் விநியோக கட்டமைப்பு சீர்குலைந்திருந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநரின் தலையீட்டால் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விடுதியில் நீர் விநியோகக் கட்டமைப்பு பல நாள்களாக தடைப்பட்டிருந்ததனால் விடுமுறையில் ஆசிரியர்கள் தங்களின் வீடுகளுக்கு செல்ல வேண்டியேற்பட்டது.

இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடு பாதிக்கப்பட்டது. இதுதொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து வடக்கு மாகாண கல்வி அமைச்சு, எதா வெட்டுனு வெவ வித்தியாலயத்தின் தண்ணீர்ப் பிரச்சினைக்கு உடனடி தீர்வைப் பெற்றுக் கொடுத்தது. (ச-27)



வவுனியா தெற்கு கல்வி வலய ஆசிரியர்களுக்கு சாரணத் தலைவர்களுக்கான கலைக்கூறு 1 பயிற்சி வவுனியா மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. (ரி-555)

# விருந்துபசாரம் இடைநிறுத்தம்

நுவரெலியா, செப்.20

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு வழங்கும் வண்ணம் அமைச்சர் ஒருவரினால் நுவரெலியா சுற்றுலா விடுதி ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தின் பின்னரான இரவு நேர விருந்துபசாரம் தடுத்து நிறுத்தப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. தேர்தல் விதிமுறைகளை மீறி விருந்துபசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் உதவித் தேர்தல் ஆணையாளர் உள்ளிட்டு குழுவினரால் குறித்த விருந்துபசாரம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. (ச-25,சி)



# தேர்தல் கடமைகளில் வினைத்திறனாற்றுக!

## யாழ்.பதில் மாவட்டச் செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப்.20

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்குப்பெட்டி விநியோகித்தல் மற்றும் கையேற்றல் கடமையில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 9 மணியளவில் யாழ் மாவட்டச் செயுலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

செயலமர்வில் யாழ்,மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் உரையாற்றுகையில்,


ஜனாதிபதித் தேர்தலில் வாக்கெண்ணும் நிலையமாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வாக்குப் பெட்டிகளையும், வாக்குச் சீட்டுகளையும், விநியோகிக்கும் மற்றும் கையேற்கும் நிலையமாகச் செயற்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்குரிய வகையில் வாக்குப் பெட்டிகளையும், வாக்குச் சீட்டுகளையும், இதர ஆவணங்களையும் கையளிக்கும் அதேவேளை 21 ஆம் திகதி வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் கையளிக்கப்படவுள்ள வாக்குப் பெட்டிகளையும், இதர ஆவணங்களையும் உரியவகையில் பெற்றுக் கொள்வதில் மிக வினைத்திறனாகச் செயற்பட வேண்டும் – என்றார். (ச-06,27)


மணி விழா நிறைவும் 52ம் நாள் நினைவஞ்சலியும்

தோற்றம் 20.09.1964

மறைவு 31.07.2024



மார்க்கண்டு சிறிகாந்தன்

(பிரதி அதிபர் யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்)

மணிவிழாக் காண்பதற்காய்
மகிழ்வோடு காத்திருந்தோம்
பணியினை நயந்து கூறி
பலர் வாழ்த்தக் காத்திருந்தார்
காத்திருப்(பு) பொன்று தானே
கதியென்று எமக்குக் கூறி
கடுகி நீர் விரைந்து சென்ற
காலனூர் எந்த வூரோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17,140,354 பேர் வாக்களிக்கத் தகுதி



**கொழும்பு, செப். 20**

**எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு 17,140,354 பேர் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.**

அதன்படி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்வாக்களிப்பதற்குகொழும்பு மாவட்டத்திலிருந்து 1,765,351 பேரும், கம்பஹா மாவட்டத்திலிருந்து 1,881,129 பேரும், களுத்துறை மாவட்டத்திலிருந்து 1,024,244 பேரும், கண்டி மாவட்டத்திலிருந்து 1,191,399 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 429,991 பேரும், நுவரெலியா மாவட்டத்திலிருந்து 605,292 பேரும், காலி மாவட்டத்திலிருந்து 903,163 பேரும், மாத்தறை மாவட்டத்திலிருந்து 686,175 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து 520,940 பேரும் தகுதிபெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலிருந்து 593,187 பேரும், வன்னி மாவட்டத்திலிருந்து 306,081 பேரும், மட்டகளப்பு மாவட்டத்திலிருந்து 449,686 பேரும், திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து 555,432 பேரும், திருகோணமலை மாவட்டத்திலிருந்து 315,925 பேரும், குருணாகல் மாவட்டத்திலிருந்து 1,417,226 பேரும், புத்தளம் மாவட்டத்திலிருந்து 663,673 பேரும், அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து 741,862 பேரும், பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து 351,302 பேரும், பதுளை மாவட்டத்திலிருந்து 705,772 பேரும், மொனராகலை மாவட்டத்திலிருந்து 399,166 பேரும், இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 923,736 பேரும், கேகாலை மாவட்டத்திலிருந்து 709,622 பேரும் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-44)

## காற்றின் வேகம் அதிகரிப்பு

கொழும்பு, செப்.20

மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலும் காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது மணிக்கு 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை வரையிலும் புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும்.

அதேவேளை, மேல், சப்ரகமுவ, தென் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை பெய்யக் கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## அரசியல்வாதிகள் கொழும்பில் முடக்கம்

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர், நாட்டில் நிலவும் சூழ்நிலையை மீளாய்வு செய்த பின்னரே அரசியல்வாதிகள் மீண்டும் பொதுவெளிக்கு வருவார்கள் எனவும் தெரிய வருகின்றது.

மேலும் சில அரசியல்வாதிகள் கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டல்களில் குடும்பத்தாருடன் முகாமிட்டுள்ளனர் எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

எனினும், இது தொடர்பில் உறுதியான தகவல் எதுவும் இன்னும் வெளியாகவில்லை.

மே 9 சம்பவத்துக்குப் பின்னர், மக்களின் நடவடிக்கை தொடர்பில் அரசியல்வாதிகள் மத்தியில் அச்ச நிலை உள்ள நிலையிலேயே, முன்கூட்டியே பாதுகாப்பு ஏற்பாடுக ளை செய்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (ஒ-44)

## வாக்கெடுப்பு நிலையங்களுள் அனுமதிக்கப்பட்டோர் விவரம்!

கொழும்பு, செப்.20

வாக்களிப்பு நிலையத்துக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டவர்களின் விவரம் தொடர்பில் தேர்தல் ஆணைக் குழுவால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி

வாக்கெடுப்பு நிலையத்தில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள், வாக்கெடுப்பு நிலைய பணிக்குழு, வாக்கெடுப்பு நிலைய கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகள், ஜனாதிபதி வேட்பாளர்கள், ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் முகவர்கள், ஜனாதிபதி வேட்பாளர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், ஜனாதிபதி வேட்பாளர்களின் பெரும்பாக முகவர்கள்,

வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், உள்நாட்டு/வெளிநாட்டு கண்காணிப்பு ஒழுங்கமைப்புகளின் முகவர்கள், தெரிவத்தாட்சி அலுவலரின் அனுமதிபெற்ற அலுவலர்கள் ஆகியோரே பிரவேசிக்கமுடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் நிதியுதவியில் 'அனைவரும் உள்ளடங்கிய சமத்துவமான கல்வியினையும் வாழ்நாளுக்கான கற்றல் சந்தர்ப்பத்தினையும் உறுதி செய்தல்' எனும் கருப்பொருளில் நெய்தல் முன்பள்ளி மாணவர்கள் கொடிகாமம் சந்தை, நீச்சா ஆகிய இடங்களுக்கு கல்விச்சுற்றுலா மேற்கொண்டனர். (ச)




## பாலியல் தொந்தரவு: உத்தியோகத்தர் கைது!



முல்லைத்தீவு, செப். 20

15 வயதுச் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு செய்த குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றும் 33 வயதுடைய ஒருவர் சந்தேகத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி அபிவிருத்தி உத்தியோகத்தர் தன்னை பாலியல் ரீதியாக தொந்தரவு செய்ததாக பாதிக்கப்பட்ட 15 வயதுச் சிறுமி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-19)

## அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குக

கொழும்பு, செப்.20

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அரச மற்றும் தனியார் ஊழியர்கள் அனைவருக்கும் விடுமுறை வழங்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகிலுள்ளோருக்கு வாக்களிக்கக்கூடியவகையில் 4 மணித்தியாலங்களுக்கு குறையாத விடுமுறை வழங்க வேண்டும் எனவும், 40 கிலோ மீற்றர் அல்லது அதற்கும் குறைந்த தூரத்தில் வசிப்போருக்கு அரை நாள் விடுமுறையும், 40 தொடக்கம் 100 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்திலுள்ளவர்களுக்கு ஒரு நாள் விடுமுறையும், 100 தொடக்கம் 150 கிலோ மீற்றர் தூரத்தில் வசிப்பவர்களுக்கு ஒன்றரை நாள் விடுமுறையும் 150 கிலோ மீற்றர் தூரத்துக்கும் அதிகமாயின் 2 நாள் விடுமுறையும் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வேண்டு கோள் விடுத்தார். (ச-25, சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்...

என்று மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலரும் பதில் மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்ப்பாண மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலரும் பதில் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

யாழில் 511 வாக்கெடுப்பு நிலையங்களும் கிளிநொச்சியில் 108 வாக்கெடுப்பு நிலையங்களும் என 619 வாக்கெடுப்பு நிலையங்கள் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளன.

வாக்களிப்பு நிலையத்தில் செப்ரெம்பர் 21 ஆம் திகதி காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பிக்கப்படும். பிற்பகல் 4 மணிக்கு வாக்களிப்பு நிலைய வரிசையில் தரித்து நிற்கின்ற வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை பிற்பகல் 4 மணிக்குப் பின்னர் வாக்களிப்பு நிலையத்தினுள் உட்பிரவேசிக்க இடமளிக்க முடியாது.

தெல்லிப்பழையினைச் சொந்த இடமாகக் கொண்டு பருத்தித்துறையில் தற்காலிகமாக வசித்து வருகின்றவர்களை வியாபாரி மூலையிலிருந்து தெல்லிப்பழையில் வாக்களிப்பதற்கான போக்குவரத்துக்கென பேருந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் கடமைக்காக 8 ஆயிரத்து 232 உத்தியோகத்தர்கள் மற்றும் 2 ஆயிரத்து 100 பொலிஸாரும் கடமையில் ஈடுபடவுள்ளனர். இலங்கைப் போக்குவரத்துச் சபை மூலம் 42 பேருந்துகளும், தனியார் போக்குவரத்துச் சங்கம் மூலம் 132 பேருந்துகளும் தேர்தல் கடமைகளுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டு இதர ஆவணங்கள் விநியோகித்தல் நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நாளை (இன்று) காலை 7 மணிக்கு ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதலாவது பேருந்து காலை 8.30 மணியளவில் புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பெறுபேற்றினைத் தயாரித்து வெளியிடும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள 511 வாக்களிப்பு நிலையங்களினதும் வாக்குகளை எண்ணுவதற்காக 41 வாக்கெண்ணும் நிலையங்களும், அஞ்சல் வாக்குகளை எண்ணுவதற்காக 14 வாக்கெண்ணும் நிலையங்களுமாக மத்திய கல்லூரியில் 55 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-20-26-125)

## ஜனாதிபதித்...

ஜனநாயகக் கடமையைச் சரிவர நிறைவேற்ற வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தலை முன்னிட்டு நாட்டில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. வாக்களிப்பு தினத்தன்றும் அதன் பின்னரான காலப்பகுதியிலும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கும். நாட்டில் உள்ள கேந்திரப் பகுதிகள், மின் உற்பத்தி நிலையங்கள், முதலீட்டு வலயங்கள் என முக்கியத்துவம் மிக்க பகுதிகளில் இராணுவத்தினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்குரிய பரப்புரைகள் யாவும் 18 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவுக்கு வந்துள்ளன. வலைத்தளங்கள் மூலமாக பரப்புரைகள் மேற்கொள்ளவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த விதியை மீறி வலைத்தளங்களில் பரப்புரைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காகத் தனிக்குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம)

## விபத்தில்...

அருகாமையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அந்தோனி அல்பிரட் அனுஷன் (வயது-22) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். டிப்பர் வாகனம் மோதியதையடுத்தே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (அ-ம-113)

## 24 மணி...

நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு, நாடெங்கும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மேற்கொள்ளப்பட்ட இந்தத் துப்பாக்கிச் சூடுகள் நாட்டில் பெரும் அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளன.

கொஹுவலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சரணங்கர வீதியிலுள்ள கடையொன்றுக்குள் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரே துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

அத்துடன் மாத்தறை மிதிகம பகுதியில் மீன் விற்பனை நிலையமொன்றில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

குருநாகல், ரஸ்நாயக்கபுர பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 30 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தங்காலை - நலகம, பொல்தவன சந்தியில் உள்ள தென்னந்தோப்பில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ச)

## சகோதரன்...

தாவளை - இயற்றாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 28 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிர்மாய்க்க முயற்சித்த பெண் திருமணமானவர் என்பதுடன், அவருக்கு இரண்டு மாத குழந்தையொன்றும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் உறவினர்களால் காப்பாற்றப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் மரணம் தொடர்பான மரண விசாரணைகளை கொடிகாமம் திடீர் மரண விசாரணை அதிகாரி தவமலர் விசாரணைகளை மேற்கொண்டார். கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-100)

## வாக்கு...

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலிருந்து இன்று காலை 7 மணி முதல் வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படவுள்ளன. இதற்காக 15 அரச பேருந்துகள், 5 அரச திணைக்கள வாகனங்கள், 34 தனியார் பேருந்துகள் பயன்படுத்தப்படவுள்ளன. 137 வாக்குப்பெட்டிகளுடன் 137 சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களும் செல்லவுள்ளனர்.

தேர்தல் பாதுகாப்புக் கடமையில் சுமார் 500 பொலிஸார் ஈடுபடவுள்ளனர். மேலும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 8 பேர் விண்ணப்பித்துள்ளதுடன், வாக்கு எண்ணும் முகவர்களாக ஜனாதிபதி வேட்பாளர்கள் சார்பில் 78 பேர் விண்ணப்பித்துள்ளனர். (அ-ஒ-5)

## பாடசாலைகளுக்கு...

குழுவின் தலைவரின் கோரிக்கைக்கு அமைய கல்வி அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. அதன்படி செப்ரெம்பர் 23 ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ச)

## திலீபனின்...

முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் நடைபெறவுள்ள குறித்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-ம-26-66-20)

## தேர்தலன்று...

கே.கனகேஸ்வரன் தெரிவித்தார். மாவட்டச் செயலகத்திலிருந்து இன்று காலை 6 மணி முதல் வாக்களிப்பு நிலையங்களுக்காக வாக்குப்பெட்டிகள் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் தலைமையில் பொலிஸ் பாதுகாப்புடன், 15 அரச பேருந்துகளிலும், 19 தனியார் பேருந்துகளிலும் 98 வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்படவுள்ளன. வாக்களிப்பின்போது 120 சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கு 4 தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும் நிலையத்தில் ஜனாதிபதி வேட்பாளர்கள் சார்பில் 119 பேர் முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். வாக்கு எண்ணும் நடவடிக்கையில் 280 அலுவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (அ-ஒ-5)

## 108 வாக்குப்...

பதில் மாவட்டச் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான சு.முரளிதரன் தெரிவித்தார்.

நாளை சனிக்கிழமை இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தலுக்காக 108 சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இன்றைய தினம் காலை 20 அரசபேருந்துகளிலும், 20 தனியார் பேருந்துகளிலும் வாக்குப் பெட்டிகளை வாக்குச் சாவடிகளுக்கு எடுத்துச் செல்லவுள்ளனர்.

மேலும் தேர்தல் கடமையில் 346 பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அவர்களுக்கு மேலதிகமாக விசேட அதிரடிப் படையினரும் தேர்தல் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடவுள்ளார்கள்.

வாக்களிப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு 10 கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாக்கு எண்ணும் நடவடிக்கையில் 344 அலுவலர்கள் ஈடுபடவுள்ளதுடன், ஜனாதிபதி வேட்பாளர்கள் சார்பில் 138 முகவர்களும் வாக்கு எண்ணும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர். (அ-ஒ-5)

## பால்...

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## தீவகத்தின்...

(வாக்கெண்ணும் மத்திய நிலையத்துக்கு) கொண்டுவரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளில் வாக்காளர்களுக்கும் தேர்தல் பணியாளர்களுக்கும் சிறப்புப் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நெடுந்தீவில் வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் தரைமூலமான பயணத்துக்கு ஏற்படும் சிரமங்களைக் கருத்திற்கொண்டு வாக்குப் பெட்டிகளை ஹெலிகொப்டரில் கொண்டு செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-ம-26-20)

## தேர்தலின் பின்...

வடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிக்க முடியும் என்றும் பொலிஸாருக்கோ பாதுகாப்புப் பிரிவினருக்கோ அதுதொடர்பில் தீர்மானம் எடுக்க அதிகாரம் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நாடு முழுவதிலும் 63 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## சங்கிலி...

மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சங்கானை மருத்துவமனை வீதியில் சைக்கிளில் சென்ற பெண்ணின் சங்கிலியை அறுத்தபோதே ஊர்மக்கள் ஒன்றுதிரண்டு சுற்றிவளைத்து அவர்கள் இருவரையும் மடக்கிப் பிடித்தனர். அவர்கள் மானிப்பாய் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் சுதுமலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், வேறு இடங்களிலும் தம்பதியராக பல்வேறு கொள்ளைகளில் ஈடுபட்டமை தெரியவந்தது.

இதன்படி, சுன்னாகத்தில் அண்மையில் சங்கிலியொன்றை அறுத்து அதை, யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் உள்ள நகைக்கடையொன்றில் அடகு வைத்துள்ளமையும் தெரியவந்துள்ளது. தொடர்ச்சியான விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ட்ரம்ப் பதவியேற்றால் சீனாவுக்கு ஆபத்தாம்

**நியூயோர்க், செப். 20**

**டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் சீனாவுக்கும் அதன் பொருளாதாரத்துக்கும் பெரும் பாதிப்பாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ட்ரம்ப் உறுதியளித்தவாறு சீனப் பொருள்களுக்கு அதிக வரி விதிப்பை நடைமுறைப்படுத்தினால், சீனாவின் ஏற்றுமதி நின்றுவிடுவது டன், அதன் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படும்.

நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் மற்றும் அறிவுசார் சொத்து திருட்டுக்காக சீனாவை குற்றம் சாட்டிய ட்ரம்ப், சீன இறக்குமதிகள் மீது 60 முதல் 100 சதவீதம்வரை வரி விதிப்பதாகக் கூறியுள்ளார். ஏனைய நாடுகளும் சீன இறக்குமதிகள் மீது அமெரிக்கா போன்று வரி விதித்தால் பிரச்சினை மேலும் மோசமாகும் என பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (எ-இ)

# வெள்ளத்தைப் பயன்படுத்தி தப்பியோடிய கைதிகள்!

நைஜர், செப். 20

நைஜீரியாவின் போர்னோ மாநிலத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் சிறை சுவர் இடிந்து வீழ்ந்ததில் குறைந்தது 274 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அங்கு கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள நிலையில் சிறைச்சாலைக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது. சிறைச்சாலையில் இருந்து தப்பியோடியவர்களின் அடையாளங்கள், அவர்களின் விவரங்கள் உள்ளிட்டவை பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கைதிகளை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது. நைஜீரியா முழுவதும் கடந்த சில வாரங்களாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கி 269 பேர் உயிரிழந்துள்ளனர். 6 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். (எ-இ)

## முதியோர் கொடுப்பனவு இன்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், செப் 20

தென்மராட்சிப் பிரதேச முதியோர்களுக்கான ஓகஸ்ட் மாத முதியோர் கொடுப்பனவுகள் அஞ்சல் அலுவலகங்களில் இன்று வெள்ளிக்கிழமை முதல் விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலக சமூக சேவைகள் அலகினால் இந்தக் கொடுப்பனவுகள் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கொடுப்பனவினை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (25-9)

### தேர்தல்...

மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். (அ-ம-26)

### வாக்காளர்களுக்காக...

ஊடாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய பேருந்துச் சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கொழும்பு கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் இன்றும், நாளையும் விசேட ரயில் சேவைகள் இயக்கப்படவுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-ம)

# பேச்சுவார்த்தைக்கு முன்னர் பகைமையை முடியுங்கள்!

## அமெரிக்காவுக்கு ஈரான் தெரிவிப்பு

தெஹ்ரான், செப்.20

நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தும் முன், ஈரானுடனான பகைமையை அமெரிக்கா முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அந்தநாட்டு ஜனாதிபதி மசூத் பெசேஷ்கியான் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற முதலாவது செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு ஆயுதங்களை வழங்குகின்றது என்று குற்றம்சாட்டி, ஈரான் மீது அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் அண்மையில் புதிய தடைகளை விதித்தன. இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள ஈரான் ஜனாதிபதி, எந்த ஆயுதங்களையும் ஈரான் ரஷ்யாவுக்கு வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# கைவரிசையை காட்டியதா மொசாட்?

லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்திய பேஜர்கள் திடீரென வெடித்துச் சிதறியுள்ள நிலையில், அதன் பின்னணியில் இஸ்ரேல் உளவு அமைப்பான மொசாட் உள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. ஹிஸ்புல்லா அமைப்பினர் இந்தப் பேஜர்களை தைவானில் உள்ள நிறுவனம் ஒன்றிடம் இருந்து பெற்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது. அந்த நிறுவனத்திடம் இருந்து 5 ஆயிரம் பேஜர்களை அண்மையில் ஹிஸ்புல்லா அமைப்பு பெற்றிருக்கின்றது. இந்தப் பேஜர்களில் சுமார் 3 கிராம் நிறையுடைய சிறிய வெடிமருந்தை மொசாட் மறைத்து வைத்திருந்துள்ளது என்று கூறப்படுகின்றது. அதனாலேயே அவை திடீரென வெடித்துச் சிதறியுள்ளன என்று தெரிவிக்கப்படு கின்றது. (எ-இ)

**தேவை**

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (TO) NVQ 5, QS கட்டட வேலை மேற்பார்வைக்குத் தேவை.

**076 660 1600, 077 711 1726**

(CS/41391) J-1

# மரண அறிவித்தல்

மண்ணில் 21 . 07 . 1944

மறைவு 18 . 09 . 2024



## சவுரி ஜேசுதாசன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் முன்னாள் மரீனா வெல்டேர்ஸ் உரிமையாளருமாகிய சவுரி ஜேசுதாசன் அவர்கள் நேற்றுமுன்தினம் (18.09.2024) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மேரி அதிசயம் அவர்களின் அன்புக் கணவரும், காலம்சென்றவர்களான சூசை சவுரி - அனந்தாசி தம்பதியரின் அன்பு மகனும், காலம் சென்ற அடைக்கலராசா மற்றும் ஜெயரட்ணம் (பிரான்ஸ்), செபமாலையம்மா (ராணி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மரீனா (டென்மார்க்), வின்சன் (பிரான்ஸ்), ஜஸ்ரின் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாணத் திறைசேரி, வடக்கு மாகாணம்), கிங்சிலி (மரீனா வெல்டேர்ஸ் உரிமையாளர்), காலம் சென்ற டேமியன், மற்றும் மில்றெட் (சுவிஸ்லாந்து), டெஸ்மன் றோய்ஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்ரன் தவராசா (டென்மார்க்) டொமினிக் ஜீவா (சுவிஸ்லாந்து), நிவேதினி (பிரான்ஸ்), ஜெனட் டியோனி (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்), அனுலாவதி (யாழ்ப்பாணம்), ஜெனிதா (ஜேர்மனி), றேணுகா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும்,

டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவர்களான சொன்ஜா, றோயிஸ்ரன், ரன்ஜா, மரிஜா மற்றும் செகான் (IIT), சனோன் (புனித பத்திரிசியார் கல்லூரி), றொனிஸ்ரன் (மருத்துவதுறை), டேனுஜன் (புனித பத்திரிசியார் கல்லூரி) மற்றும், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்களான சாதோக், போல் டேமியன், ஜெனிமா, ரசேல், ரபாயல் டேமியன், ரியானா மற்றும் றொசானா (சுவிஸ்லாந்து), டேனுஜா (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும், சொபியாவின் (டென்மார்க்) கொள்ளுப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (20.09.2024) வெள்ளிக்கிழமை இலக்கம் 186, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் இடத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக, யாழ்பாணம் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறைவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**

**குடும்பத்தினர் சார்பாக கிங்சிலி, ஜஸ்ரின்**

**077 143 9374, 077 942 4844**

(CS/56259) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.